ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2116/29 - 2019 මාර්තු මස 26 වැනි අඟහරුවාදා - 2019.03.26
*2116/29 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 26 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தில், 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சர், ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின், கட்டுபொத - பமுனாகொட்டுவ - படுவஸ்நுவர நீர் வழங்கல் திட்டத்தின் கட்டுபொத நீர்த் தாங்கி கோபுரம் மற்றும் நிலக்கீழ் நீர் தாங்கியை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டொன்று தேவைப்படுவதனால், இங்கு கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் உரிமையை எடுத்துக் கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும்
உயர்கல்வி அமைச்சர்.

நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சு,
இலக்கம் 35, லக்திய மெதுர,
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை.
2019, மாச்சு 13.
5/2/3/1454


இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

வடமேல் மாகாணத்தின், குருநாகல் மாவட்டத்தில், பமுனாகொட்டுவ பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 1226, வதுகன கிராம அலுவலர் பிரிவில், வதுகன கிராமத்திலமைந்த, பிரதான நில வரைபட இலக்கம் 690 (B. S) இல் காணித்துண்டு எழுத்து "A" எனும் குறிப்பிடப்பட்டுள்ள முழு அளவில் சுமார் 80 பேர்ச்சஸ் அளவிலான “விஹாரேமமுவ மற்றும் வத்த” எனும் பெயருடைய காணியில் கீழ்க் காணப்படும் எல்லைகளில் அமைந்த காணித்துண்டு.

காணியின் பெயர்: விஹாரேமமுவ மற்றும் வத்த;
விஸ்தீரணம்: 80 பேச்சர்ஸ்.

காணியின் எல்லைகள்:

வடக்கு: எஞ்சிய காணி;
கிழக்கு: வதுகன பாதை;
தெற்கு: எஞ்சிய காணி;
மேற்கு: தெமலதொர கிராம எல்லை.

காணிக்கு உரிமை கோருபவர்களின் பெயரும் முகவரியும் :

1. மதிப்பிற்குரிய தெலிவே நாரத தேரர்,
விஹாராதிபதி,
புராதன ஸ்ரீ சைலகிரி ரஜ மகா விஹாரை,
வதுகன, கட்டுபொத,
குருநாகல்.

2. கௌரவ பொது நம்பிக்கைப் பொறுப்பாளர்,
பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம்,
புல்லர்ஸ் வீதி,
கொழும்பு - 07

4 - 301

---

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சர், ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு கெப்பெட்டிபொல நீர் வழங்கல் கருத்திட்டத்தின் நீர்த் தாங்கி மற்றும் அலுவலகம் ஆகியவை நிர்மாணிக்கப்பட்டுள்ள காணிப்பகுதியை எடுத்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை எடுத்துக் கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும்
உயர்கல்வி அமைச்சர்.

நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சு,
இலக்கம் 35, லக்திய மெதுர,
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை.
2019, மாச்சு 13.
5/2/3/1455

**அட்டவணை**

பதுளை மாவட்டத்தின், வெலிமடை பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 50D, கெப்பெட்டிபொல கிராம அலுவலர் பிரிவில், மஹவத்த கிராமத்தில் அமைந்துள்ள உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு. கே. எல். சுதன்த ரத்நாயக அவர்களினால் தயாரிக்கப்பட்ட 2009.06.26 மற்றும் இலக்கம் 241 உடைய திட்டப்படத்தில் துண்டு இலக்கம் 1 என குறிப்பிடப்பட்டுள்ள ஹெம்பொல உல்ல என்றழைக்கப்படும் காணியின் முழு விஸ்தீரணத்தில் இருந்து அண்ணளவாக 0.1239 ஹெக்டயார் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.

வடக்கு: கந்தே எல;
கிழக்கு: நீண்டு செல்லும் கால்வாய் காப்பு மற்றும் வீதி;
தெற்கு: திரு. பி. டி. பன்துசேன அவர்கள் உரிமை கோருகின்ற காணி;
மேற்கு: திரு. பி. டி. பன்துசேன அவர்கள் உரிமை கோருகின்ற காணி மற்றும் கந்தேஎல.

காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும் :

1. திருமதி பி. ஜீ. டி. சீ. தமயன்தி,
திலங்க,
வடக்கு கெபில்லேவெல,
பண்டாரவலை.

2. திருமதி. ஜீ. டபிள்யூ. சந்திரகான்தி,
புரசத,
தோரண ஹந்திய,
கெப்பெட்டிபொல.

4 - 302